செய்தி வெளியீடு எண்: 631 நாள்:19.08.2021

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தலில் மாநில சட்டப் பேரவை முஸ்லிம் உறுப்பினர்கள் பிரிவில் இரண்டு காலியிடங்களுக்கான தேர்தல் கால அட்டவணை 11.08.2021 அன்று அறிவிக்கையாக வெளியிடப்பட்டது.

2. தமிழ்நாடு மாநில சட்டப் பேரவை முஸ்லிம் உறுப்பினர்கள் பிரிவுக்கு திரு. ப.அப்துல் சமது மற்றும் திரு. ஜெ. முகமது ஷாநவாஸ் ஆகிய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

3. தேர்தலில் மேற்கண்ட பிரிவில், இரண்டு காலியிடங்களுக்கு இரண்டு பேர் மட்டுமே போட்டியிடுவதால், தமிழ்நாடு வக்ஃப் வாரிய (உறுப்பினர்களுக்கு தேர்தல் நடத்துதல்) விதிகள், 1997, விதி 9(6)–ன் படி இவர்கள் இரண்டு பேரும் தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர் , மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9